செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 21.10.2016

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; செப்ரெம்பர் 2016

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

## தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமரா. சத்தரசிங்ஹ அவர்கள், 2016 செப்ரெம்பர் இற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருடம் பணவீக்கம் 2016 செப்ரெம்பர் இல் 4.7% என கணிக்கப்பட்டது. 2016 ஓகஸ்ட் இல் பணவீக்கம் 4.5% ஆகக் காணப்பட்டதெனவும் தெரிவித்தார். 2016 செப்ரெம்பர் இல் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளில் இருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு முறையே 2.1%, 2.7% ஆகும்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 செப்ரெம்பர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 செப்ரெம்பர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 113.5 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (ஓகஸ்ட்) சுட்டெண்ணான 113.3 உடன் ஒப்பிடுகையில் 0.2 சுட்டெண் புள்ளி அல்லது 0.2 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.07% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.18% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

ஓகஸ்ட் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 செப்ரெம்பர் இற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.07% அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த மாதம் (ஓகஸ்ட்) உடன் ஒப்பிடும்போது 2016 செப்ரெம்பர் இல் வாழைப்பழம், பப்பாசி, தேசிக்காய், பெரிய வெங்காயம், அரிசி, தேங்காய், மாம்பழம், கோழி இறைச்சி, அன்னாசி, பருப்பு, நெத்தலிக் கருவாடு என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே உணவுப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்புக்குக் காரணமாகும். எனினும் மரக்கறி, பச்சை மிளகாய், முட்டை, உருளைக்கிழங்கு, உடன் மீன், கோதுமை மா என்பவற்றின் விலைகளில் கடந்த மாதம் (ஓகஸ்ட்) உடன் ஒப்பிடும்போது விலை வீழ்ச்சி காணப்படுகிறது.

ஓகஸ்ட் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 செப்ரெம்பர் இற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.18% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'மதுபானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', 'கல்வி', 'உடையும் காலணியும்', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பினாலாகும். 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தனப் பராமரிப்பு' பிரிவின் செலவுப் பெறுமதியில் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டது 'வீடு, நீர், மின், எரிவாயு, ஏனைய எரிபொருள்', 'சுகாதாரம்', 'போக்குவரத்து', 'தொடர்பாடல்', 'கேளிக்கை மற்றும் கலாச்சாரம்' ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை. 'மதுபானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து' இலுள்ள செலவுப் பெறுமதி அதிகரிப்பு, இம்மாதம் பாக்கு, வெற்றிலை விலை அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். 'கல்வி' இல் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பு, 2016 செப்ரெம்பர் முற்பகுதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் சர்வதேசப் பாடசாலைக் கட்டண அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும்.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2015** | செப்ரெம்பர் | 108.4 | 0.0 | 1.9 |
| | ஒக்ரோபர் | 109.2 | 0.7 | 3.0 |
| | நவம்பர் | 112.0 | 2.6 | 4.8 |
| | டிசம்பர் | 113.2 | 1.1 | 4.2 |
| **2016** | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

தொ. இல.: 011-2147001 / 011-2147020